Covai Comics Club

ISSUE 13

# அபாய வீடு

"PERIL AT END HOUSE"



## அகதா கிறிஸ்டி

FAN MADE NOT FOR SALE

நன்றி

திரு. பூபதி

திரு. K.V.கணேஷ்

திரு. வீரபாண்டியன்


ஜூன் 1930, கார்னிஷ்
(காரன்வால்) கடற்பகுதி
???
?!?
ஆஆஆஆஆஹ்ர!!
சந்தேகமே இல்லை!! நிச்சயம் இது ஒரு விபத்து தான்!!


புரியவில்லை?
தொலைந்த விமான ஓட்டுனர் பற்றி!! அது ஒரு விபத்து!!
??
சேடான் பற்றி தான் சொல்கிறேன், உலகம் முழுவதும் சுற்றியவன், எங்கே போனான் என்றே தெரியவில்லை!
என்னுடைய கணிப்பு, நிச்சயம் பசிபிக் அருகில் ஏதேனும் ஒரு தீவில் தான் அனைத்தும் முடிந்து இருக்க வேண்டும்!
விடுமுறையில் வேலையை பற்றி பேசமாட்டேன் என்று கூறிவிட்டு இப்படி ஒரு ஆடம்பர ஹோட்டலுக்கு வந்துவிட்டு, நீங்களே இப்படி பேசுவது சரியா?!
உங்கள் உடல் தான் இங்குள்ளது, மனம் வேறெங்கோ றெக்கை கட்டி பறந்து கொண்டு இருக்கிறது!!
எனதருமை ஹேஸ்டிங்ஸ்!! நீ சொல்வது எல்லாம் உண்மைதான், நான் எங்கே இருந்தாலும், என்னுடைய பலம் துப்பறிவதில் தானே இருக்கிறது!
QUELLA-GUYOT + JOLLET
விஷ்ஷொக்கு
டிங்
அஹ்ற?!
??
ஆஆஹ்!!


உங்களுக்கு ஏதாவது உதவி தேவையா?
ஆவ்!! என்னு- -டைய கால்!!
அதிகம் குடிச்சுட்டீங்களா மிஸ்டர். பாய்ராட்?
மேடம், இவன் சொல்வது எதையும் கேட்க வேண்டாம், வேர் அல்லது கல் தடுக்கி இருக்கும்... என் கால் தான் சுளுக்கிவிட்டது!
உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை, நீங்கள் பார்க்க தேவதை போல இருக்கிறீர்கள்... சிறிது நேரம் உட்காருங்கள்.
நீங்கள் மருத்துவரிடம் உடனே செல்வது நல்லது.
நீங்கள் அருகில் அமர்ந்த அடுத்த வினாடியே வலி எல்லாம் மாயமாகிவிட்டது.
காக்டையில் தரட்டுமா? உங்களுக்கு நேரம் இருக்குமா?
நன்றி! நன்றி! என்னுடைய பெயர் நிக்.
இல்லை... இல்லை... வேண்டாம்!! நான் அதோ அந்த மலையின் முகட்டில் தெரிகிறதே ஒரு வீடு, அங்கே தான் வசிக்கிறேன்.
பார்க்கவே ஒரு கேக்கை போல அருமையாக இருக்கிறது!
அருகில் சென்று பார்த்தால் தான் அது எவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறது என்று தெரியும், பல காலமாக அதை பலீக் குடும்பம் தான் சொந்தம் கொண்டாடி வருகிறது, இங்கு எல்லோரும் அந்த வீட்டை அபாய வீடு என்று தான் அழைப்பார்கள், காரணம் அந்த வீட்டின் ராசி அப்படி!
இன்னும் சொல்லபோனால் கடந்த மூன்று நாட்களில் நான் இதுவரை மூன்று முறை சாவில் இருந்து தப்பித்து இருக்கேன்!
???


சாவில் இருந்து தப்பினீர்களா? கொஞ்சம் தெளிவாக சொல்லுங்கள்?!
எல்லாம் சின்னச்சின்ன விபத்துக்கள் தான்... நான்தான் அதை மிகைப் படுத்திவிட்டேன்.
நிஜமாகவே விபத்துக்கள் தானா?
அதோ சாலென்ஜெர்!! எனக்காகத்தான் வந்திருக்கிறது!!
என்னுடைய நண்பர்கள் அனைவரும் செயின்ட் லூ'வில் எனக்காக காத்துக்கொண்டு இருப்பார்கள், நான் இங்கே சிறிது நேரம் பொழுதை கழிக்க வந்தேன்...
ஜார்ஜ்!! நான் இங்கே இருக்கிறேன்!
நிக்!!
இவர் தான் சாலென்ஜெர் கப்பலின் காப்டன்.
ஹலோ ஜென்டில்மென்!!
நிக் நாம் சீக்கிரம் கிளம்ப வேண்டும்!! ப்ரெடி மற்றும் ஜிம் நமக்காக காத்துக் கொண்டு இருப்பார்கள்!!
சரி, நான் கிளம்ப வேண்டிய நேரம் வந்து விட்டது மிஸ்டர். பாய்ராட், நீங்களும் உங்கள் காலை பார்த்துக் கொள்ளுங்கள்!!
ஐயையோ!! தொப்பியை மறந்துவிட்டு சென்றுவிட்டார்!!
நாம் கொண்டு போய் கொடுத்து விடலாமா... என்ன?
காரணம் இருக்கு!! இங்கே பார்... இது தோட்டாவால் உருவாக்கப்- -பட்டது!!



நீங்கள் இதில் இவ்வளவு அதிகம் யோசிக்க வேண்டிய அவசியம் என்ன?
சிறிது நேரத்திற்கு முன் நமக்கு மேலே இருந்த உத்திரத்தில் பட்டதும் இதே குண்டுதான்!!
இதோ இதுதான்?
ஹேஸ்டிங்ஸ், அந்த பெண்மணி சொன்னது எதுவுமே பொய்யில்லை, அவர் உண்மையிலேயே சாவில் இருந்து தான் தப்பியிருக்கிறார்!!
இன்று மாலையே இந்த தொப்பியை கொண்டு போய் கொடுக்க போகிறோமா.
ஆமாம்.
அது தான் அவர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தாது, நமக்கும் அந்த இடத்தை நோட்டமிட வசதியாக இருக்கும்.
நான் இதை மாலை வாங்கிக் கொள்கிறேன்.
நிச்சயமாக சார்!
நிச்சயம் அருகில் இருந்து தான் சுட்டு இருக்கிறார்கள்... கடல் அலைகள், வண்டிகள், விசைப்படகின் சத்தத்தில் நமக்கு எதுவும் கேட்கவில்லை!!
எது எப்படியோ? அந்த பெண்ணின் உயிருக்கு இப்பொழுது ஆபத்து என்பது உறுதி!!


அதோ!! அவள் தன் நண்பர்களுடன் துறைமுகத்தில் உள்ள ரெஸ்டாரண்டில் உணவருந்த செல்கிறாள் போல...
உங்களுக்கு அந்த பெண்ணை பிடித்திருக்கிறதா?
மிஸ்டர். ஹேஸ்டிங்ஸ்?! இப்பொழுது தாங்கள் கூறவருவது என்னவாம்?
ஹலோ மிஸ்.பக்லீ!! இப்பொழுது தான் உங்களுடைய தொப்பியை கொண்டு வந்து கொடுப்பது பற்றி பேசிக்கொண்டு இருந்தோம்!
ஓஹ்!! எனக்கு மறதி அதிகமாகி விட்டது...
தற்சமயம் எங்களிடம் இல்லை... எப்படியோ நீங்கள் இங்கே இருக்கும் பொழுதே உங்களிடம் சில விஷயங்களை பேசிவிடுகிறேன்...
மிஸ்.பக்லீ தான் என்னுடைய கலீக் கீழே விழுந்த பொழுது உதவி செய்தார்...
ஆமாம்!! அவளும் சொன்னாள்...
அப்படியென்றால் அது உண்மைதானா? நான் அவள் விளையாடுகிறாள் என்று நினைத்தேன்!! அவளுக்கு இப்படி பொய் சொல்லி விளையாடுவது ஒரு பொழுது போக்கு... இப்பொழுது அவர் எப்படி இருக்கிறார்?
இப்பொழுது எவ்வளவோ தேவலாம் மேடம்!
நிக் என்னுடைய நெருங்கிய தோழி, அவளுடைய திறமையே பொய் சொல்வது தான், மூச்சு விடுவதை போல சரளமாக பொய் சொல்வதில் கெட்டிக்காரி... சரிதானே, ஜிம்?
இதோ வந்து விட்டார்கள்!!
நான் இன்று மாலை உங்களை சந்திக்கிறேன் மிஸ். பக்லீ!! உங்கள் நேரத்தை எனக்காக


இப்பொழுது கிளம்பினால் தான் சரியாக இருக்கும்!!
ஆமாம்... என்ன இருந்தாலும் இப்படி பட்டப்பகலில், அதுவும் ஹோட்டலின் திறந்த வெளிப்பகுதியில் ஒரு கொலையை துணிந்து செய்ய திட்டமிட்டு இருப்பது முட்டாள் தனமாக உங்களுக்கு தெரியவில்லை?
என்னைக் கேட்டால்? நானா திட்டமிட்டேன்!!
இப்படி யோசித்துப் பார், இப்படி ஒரு பொழுது- -போக்கும் இடத்தில் யார் தான் கொலைகாரனை எதிர்பார்த்து இருப்பார்கள்?!
ரொம்ப சரி, சுற்றி அனைத்து இடத்திலும் மக்கள் வெள்ளம் ஒரு திரையை போல இருக்கும் பொழுது அவனுடைய காரியம் சுலபமாக முடியவும் வாய்ப்புகள் உண்டு, இது ஏன் எனக்கு தெரியவில்லை?!
இப்பொழுது புரிந்ததா?!
மாட்டிக்கொள்வதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கத்தானே செய்கிறது, இப்படி ஒரு திட்டத்தை தீட்ட நிச்சயம் ஏதாவது காரணம் இருக்க வேண்டும்!!
திரும்பவும் சொல்கிறேன் ஹேஸ்டிங்ஸ்!! சடலம் இல்லாமல் கொலையும் இல்லை, கொலைகாரனும் இல்லை!!
QUELLA-GUYOT + JOLLET
உங்களுக்கு யார் வேண்டும்?
நாங்கள் மிஸ்.பக்லீயை பார்க்க வந்துள்ளோம், நாங்கள் வரப்போவது அவருக்கும் தெரியும்.
ஓஹ்!! அப்படியே நேராக செல்லுங்கள்!!



டொக்! டொக்!
நாங்கள் மிஸ்.பக்லீயை....
உள்ளே வாருங்கள்...
அமருங்கள்... நான் மேடமிடம் சொல்கிறேன்.
!
அனைத்தும் சிறப்பாக இருக்க வேண்டும்!! ஐஸ்க்ரீம் முக்கியம்!!
சொல்லுங்கள்!! நான் செத்தாலும் என்னால் உங்கள் இருவரையும் புரிந்துகொள்ள முடியாது...
தேவதையை போல் இருக்கும் நீங்கள் இவ்வளவு இளம் வயதில் இறப்பதும் குற்றமே....
உங்களுடைய தொப்பி!!
என்ன? என் தொப்பியா?!


பாருங்க!!
ஆனால்... நான் நினைப்பதை மட்டும் தயவு செய்து... கூறிவிடாதீர்கள்...
என்னிடம் ஆதாரம் இருக்கிறது!
இன்று காலை உங்களை கொலை செய்ய முயற்சி நடந்து இருக்கிறது!!
என்னை... ஏன்? எதற்காக?
எனக்கும் அதே கேள்விதான், இதற்கு முன் விபத்து என்று நீங்கள் குறிப்பிட்ட அந்த விஷயங்களை கூற முடியுமா?
நான் ஹெர்க்யூல் பாய்ராட், நான் ஒரு டிடெக்டிவ், என்னால் நிச்சயம் உங்களுக்கு உதவ முடியும்.
எனக்கு உங்கள் பெயர் அவ்வளவு பரிச்சயம் கிடையாது, இருந்தாலும் சொல்கிறேன்...
முதல் விபத்து, என்னுடைய படுக்கைக்கு மேலே இருந்த பெரிய வரைபடம் அறுந்து விழுந்தது, அதை கட்டி இருந்த கயிறு நைந்து போய் இருந்ததால், அது அறுந்து இருக்கலாம்...
காற்றில் அடித்துக் கொண்டு இருந்த ஜன்னலை சாத்துவதற்காக நான் எழுந்து சென்றேன், இல்லையேல் நிச்சயம் நான் நசுங்கி இருப்பேன்!!


இரண்டாவது முறை, நான் நீராட செல்லும் பொழுது ஒரு பெரிய பாறை உடைந்து சரிந்தது...
நான் நூலிழையில் உயிர் தப்பினேன்!
நான் அதிகம் பயந்தது மூன்றாவது முறைதான், வண்டியை ஒர்க் ஷாப்பில் இருந்து எடுத்து வரும் வழியில், என்னுடைய கார் பிரேக் பிடிக்காமல் கட்டுப்பாட்டை இழந்து...
...இழந்து ஒரு கரட்டில் சரிந்து, அதன் முனையில் இருந்த பாறையில் மோதி நின்றது.
அந்த ஒர்க் ஷாப்பின் உரிமையாளர் மிஸ்டர். மாட், வண்டியில் ஏதோ ஒரு ஸ்க்ருவை தளர்வு செய்ததாக கூறினார்
அங்கே இரவு முழுவதும் காரை பூட்டியா நிறுத்தி இருந்தீர்கள்?
இல்லை!
அப்படியென்றால் அங்கே யாராவது உங்கள் வண்டியின் பிரேக்கில் தங்கள் கைவரிசையை காட்டி இருக்கலாமே?!
மாட்டும் அதையேத்தான் கூறினார்!!
மிஸ். பக்லீ, நீங்கள் ஆபத்தில் இருப்பதாக நான் உணர்கிறேன்!! நீ என்ன சொல்கிறாய் ஹேஸ்டிங்ஸ்?
எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது!!



நீங்கள் ஏன் இவ்வளவு மிகைப்படுத்துகிறீர்கள்?
இல்லவே இல்லை, இன்று காலை நீங்கள் ஹோட்டல் அருகே தலையில் சுடப்பட்டு சடலமாக கிடப்பதற்கு நிறைய வாய்ப்புகள் இருந்தது!!
அதற்கு சாத்தியமே இல்லை!!
இவ்வளவு பிடிவாதம் ஆகாது! நீங்கள் ஏன் நான் சொல்வதை புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறீர்கள்!!
காரணம் உண்டு!! இப்படி பல கட்டுக்கதைகளை என் தாத்தாவும் ஊர் மக்களுக்கு சொல்லி இருக்கிறார், அப்படி பேசுபவர்களுக்கு இந்த ஊர் மக்கள் கொடுக்கும் பட்டப்பெயர் தான் நிக்! தாத்தா “ஓல்ட் நிக்” நான் “லிட்டில் நிக்”, அதனால் தான் நீங்கள் சொல்லும் எதிலும் எனக்கு நம்பிக்கை வரவில்லை..
அப்புறம் என்னுடைய உண்மையான பெயர் மக்டெல்லா, ஆழகான பெயர், ஆனால் யாருக்கும் அதிகம் தெரியாது.
இந்த கதையை உங்களை இன்று காலை “மௌஸர்” ரக துப்பாக்கியால் சுட்டவனிடம் கூற முடியுமா?!
மௌஸர்?
உங்களுக்கு அந்த துப்பாக்கி வைத்திருக்கும் யாரையாவது தெரியுமா?
என்னிடம் தான்!
என் தந்தையுடையது, அவர் போரில் பயன்படுத்திய துப்பாக்கி, இதோ இந்த மேஜையின் மேல் டிராயரில் தான் உள்ளது.
ஐயையோ!! அது... துப்பாக்கி... காணவில்லை!!


நான்...!
நிதானமாக வந்து கொஞ்சம் அமருங்கள்!!
நடப்பது எல்லாமே கொஞ்சம் உறுத்தலாகத்தான் இருக்கிறது, உங்களை சுட உங்களுடைய துப்பாக்கியை வைத்தே ஒருவர் முயற்சி செய்து இருக்கிறார் என்றால், நிச்சயம் இதை தற்கொலையாக மாற்றுவது தான் கொலையாளியின் ஒரே நோக்கமாக இருந்திருக்க வேண்டும்...
...அதில் உங்களுடைய கைரேகை நிச்சயம் இருக்கும் என்ற காரணத்தால்.
ஆனால் யார்?
யார்? யாராக இருந்தாலும் உங்களை கொலை செய்ய இதுவரை நான்கு முறை முயற்சி செய்து தோற்றுவிட்டான், அடுத்த முறையும் அப்படியே நடக்கும் என்று கூற முடியாது, அதனால் தயவு செய்து உங்களுக்கு தெரிந்ததை என்னிடம் கூறுங்கள்
உங்களுக்கு எதிரிகள் என்று யாராவது இருக்கிறார்களா?
இல்லை... அது வந்து... எனக்கு தெரியவில்லை...
உங்களுடைய மரணத்தால் யாருக்காவது ஆதாயம் இருக்கிறதா ?
நிச்சயமாக இல்லை, எந்த நிமிஷமும் இடிந்து விழும் நிலையில் இருக்கும் இந்த வீட்டினால் யாருக்கும் ஆதாயமும் கிடையாது!!
என்னுடைய பெற்றோர்கள் ஒரு சாலை விபத்தில் இறந்த பிறகு, நான் என் தாத்தாவுடன் இந்த வீட்டில் தான் வசித்து வருகிறேன்...
என்னுடைய சகோதரனும் போரில் இறந்துவிட்டான்...
வேறு யாராவது?
ஒரு கஸின், பெயர் சார்லஸ் வைஸ், எக்ஸீட்டரில் நோட்டரி வக்கீலாக இருக்கிறான், என்னுடைய அலுவல் சம்பந்தமான அனைத்தையும் அவன்தான் கவனித்து கொள்கிறான், அவனுடன் பேசினால் நமக்கு தூக்கம்தான் வரும்...
ஓஹ்!



நீங்கள் எதுவும் கனவு காண வேண்டாம், அவனுக்கும் எனக்கும் ஏழாம் பொருத்தம், இன்னும் சொல்லப்போனால் அவனுக்கும் என்னை அவ்வளவாக பிடிக்காது!!
மேலும் யாராவது?
யார்க் ஷையரில் கொஞ்சம் தூரத்து உறவினர்கள் இருக்கிறார்கள் அவ்வளவு தான்
அப்பொழுது தனிமையில் தான் இருக்கிறீர்கள் போல? நண்பர்கள்?
லண்டனில் நான் வசித்த வரை எனக்கு நிறைய நண்பர்கள் உண்டு, ஆனால் இங்கே சொற்பம் தான், உங்களுக்குத் தான் அவர்களை தெரியுமே!
வேலையாட்கள்?
வீட்டு வேலைக்காக ஒருவர்.. பெயர் எல்லன், மற்றும் அவருடைய கணவர், இங்கேதான் தோட்ட வேலை செய்கிறார், இங்கேயே தங்கி வேலை செய்பவர்கள்!!
நாம் உங்களுடைய நண்பர்களை பற்றி பேசுவோம்..
என்னுடைய தோழியின் பெயர் ப்ரெடி ரைஸ், இங்கே வந்து கொஞ்ச நாட்கள் தான் ஆகிறது.
தனியாகவா?
ஆம்!! அவள் திருமணம் செய்து கொண்டது ஒரு குடிகாரனை, அவன் இவளுக்கு செய்த கொடுமையின் காரணமாக அவனை பிரிந்துவிட்டாள், இரண்டு வருடம் ஆகிறது, விவாகரத்தும் தரமாட்டேன் என்று இழுத்தடித்துக் கொண்டு இருக்கிறான்.
பிரெட்டியும், ஜிம் லாசரஸும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள், அவர் இங்கே ஒரு ஆன்டிக் டீலராக இருக்கிறார், அது மட்டும் இல்லை பணக்காரரும் கூட!!
அடுத்து என்னுடைய உயிரற்ற தோழன் "சாலெஞ்ஜெர்", இன்று காலை நீங்கள் பார்த்த கப்பல்.
மற்றும் அந்த கப்பலின் கேப்டன் ஜார்ஜ்! தங்கமான மனிதர், ஒவ்வொரு வார இறுதியிலும் அவர் இங்கே வந்துவிடுவார்.
அவருக்கு என்னை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசை!!
ஏன் உங்களுக்கு அதில் விருப்பம் இல்லையா?
எங்கள் இருவரிடமும் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு ஒன்றும் இல்லை, மேலும் அவர் என்னைவிட வயதில் அதிகம் மூத்தவர், அவர் எனக்கு ஒரு நல்ல நண்பர்!



இப்பொழுது மீண்டும் துப்பாக்கி விஷயத்திற்கு வருவோம்... அதை எடுக்க எப்படி இருந்தாலும் வீட்டுக்குள் வந்து தானே ஆகவேண்டும்??
வீடு முக்கால்வாசி நேரம் திறந்து தான் இருக்கும்.
அது வீட்டின் நுழைவு கதவு, மற்ற வழிகள்?
ஓஹ்!! அதுவா, இங்கிருந்து நேராக கடற்கரைக்கு செல்லும் வழி, இந்த வீட்டில் இருந்து கரட்டின் இடுக்கின் வழியாக கீழே செல்லும்.
நாங்களும் அதை பார்த்தோம், அதை அவ்வளவு எளிதாக கடக்க முடியாது என்பது எங்கள் கருத்து!!
என்னுடைய வேலை எளிதாகி--விட்டது, அந்த வழியாக சென்றால் நீங்கள் தங்கி இருக்கும் ஹோட்டலுக்கு விரைவாக சென்று விடலாம்.
மேடம்! நீங்கள் தங்கி இருக்கும் இடமே அபாயமானதாக எனக்கு தெரிகிறது, உங்களுக்கு பாதுகாப்பு அவசியம்!
நீங்கள் மறுப்பு கூறி, உங்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிலைக்கு எங்களை நிர்பந்திக்க வேண்டாம்!!
நம்பத் தகுந்த நண்பர்கள் யாராவது...?
பிரெட்டி, ஜார்ஜ்?
அவர்களை தவிர்த்து?
மேகி இருக்கிறாள்...
யார் அது?
யார்க் ஷையரில் வசிக்கும் என்னுடைய உறவினர்களில் ஒருத்தி, எங்களுக்கு ஒரே வயசு தான், அவளுடைய தந்தை அங்கே ஒரு சர்ச்சில் பாஸ்டராக இருக்கிறார்.
அவளுக்கு எங்களுடைய வாழ்க்கை முறையில் அவ்வளவு ஈடுபாடு கிடையாது, எப்பொழுதாவது இங்கே வந்து தங்குவது உண்டு.
அவள் தான் இதற்கு சரிப்பட்டு வருவாள், உடனே அவளுடைய உதவி உங்களுக்கு தேவை என்று கூறி அவளுக்கு ஒரு டெலிகிராம் அனுப்புங்கள்.
நிச்சயமாக, அவள் கிறிஸ்துவத்தை அதிகம் நேசிப்பவள், அதனால் பிறருக்கு உதவி செய்யும் குணம் இயல்பாகவே அவளுக்கு அதிகம், நிச்சயம் சீக்கிரம் வந்துவிடுவாள்.


நாங்கள் சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டோம்... எதற்கும் உங்கள் வேலையாட்களிடம் இரவு நேரத்தில் அனைத்தையும் மூடிவிட சொல்லுங்கள்.
வரப்போகும் ஆபத்து ஏன் இந்த பெண்ணுக்கு புரியவில்லை?!
அவள் சொல்வது பொய்யாக இருந்தால்?
நிச்சயமாக இல்லை, அவள் ஆபத்தில் இருக்கிறாள் என்பதை புரியவைக்கவே நான் நிறைய கஷ்டப்பட்டு விட்டேன்..
எனக்கு இது ஒரு சவாலான கேஸாக இருக்கப் போவது மட்டும் உண்மை, இதுவரை நான் ஒரு கொலைகாரனை தேடித் தான் அலைவேன், மிஸ். நிக்கிற்கு யார் மீதும் சந்தேகம் இல்லாத காரணத்தால் இம்முறை கொலைகாரன் கொலை செய்யாமல் இருக்க அலையப் போகிறேன்.
இதில் எந்த போலீஸையும் ஈடுபடுத்தாமல், மேலும் அந்த வீட்டிற்கு வெளியே இருந்து அவரை காப்பாற்ற முயற்சிக்க வேண்டும்.
அப்படிப்பட்ட வேலைகளை செய்ய இங்கே ஆட்கள் உண்டு.
ஹேஸ்டிங்ஸ்!!
சுருக்கமாக சொல்கிறேன், அதற்கு அவளுடைய களின் தான் சரியான நபர்.
SILVER WING
IMPERIAL AIRWAYS
GARAGE
MOTT'S GA
அவர் கூறிய ஒர்க் ஷாப் இதோ இங்கே இருக்கிறது!
மிஸ்.பக்லீ? அந்த கதையை நான் என்னவென்று சொல்லுவேன்?
இதோ அவருடைய கார்!!
அதுக்கு?
அது... அது... நிச்சயம் இதில் நாசவேலை நடந்துள்ளது!!



உன்னை நம்பலாமா?
நீங்கள் கேட்டது என்ஜினை பற்றி, பெண்ணைப்பற்றி இல்லை, அதனால் நான் என்ன சொல்கிறேன் என்பதை தெரிந்து தான் கூறுகிறேன்!!
சரி... சரி... புரிந்துவிட்டது.
சொல்வதற்கு பெரிதாக ஒன்றும் இல்லை, சின்ன விஷயம் தான், ஆனால் இந்த ஊரில் நான் இது வரை இப்படி எதையும் பார்த்தது இல்லை.
எல்லோரும் இப்படித்தான் சொல்லுவார்கள்... இன்னொன்றும் உண்டு!
“எனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை”
என்ன சொல்கிறீர்கள்!
நீங்கள் என்ன சொன்னாலும் சரி, இது நிச்சயம் ஒரு நாசவேலை தான்.
அப்புறம் எனக்கு இதில் எந்த சம்பந்தமும் இல்லை!!
நாம் அவருடைய நண்பர்கள், அவர்களின் வேலை, கொலை முயற்சி நடந்த சமயத்தில் அவர்கள் எங்கு இருந்தார்கள் போன்ற விபரங்களை சேகரிக்கத்தொடங்க வேண்டும்.
சரியாக சொன்னாய்!!
ஆனால் முடிவை இப்பொழுதே ஓரளவு யூகிக்க முடிகிறது..
என்ன?
உனக்கு இன்னமுமா புரியவில்லை, இது மிகவும் பழமையான யுக்தி, அவர் எங்கே போகிறார், வருகிறார், என்பதை முன்கூட்டியே அதோ ஒரு ஜன்னல் அல்லது கதவிற்கு பின்னால் இருந்து பார்த்து...
...அவர் அசந்த நேரம் பார்த்து சுட்டுவிட்டு, பின் எதுவும் தெரியாதது போல கூட்டத்துடன் கூட்டமாக வந்து சேர்ந்துகொள்வது... என்ன நான் யாரை சொல்கிறேன் என்று புரிகிறதா...
இதில் நான் சொல்ல இனி என்ன இருக்கிறது.


நான் இப்பொழுது கூறியது அனைத்தும் ஒரு அனுமானத்தின் அடிப்படையில் தான், நமக்கு இந்த நாடகத்தில் யாரெல்லாம் நடிகர்கள் என்று இதுவரை தெரியாது, அதை சொல்லவேண்டிய இடத்தில் இருந்தவரும் யார் மீதும் சந்தேகிக்கவில்லை!
நமக்கு அந்த வீட்டில் வேலை செய்யும் கணவன் மனைவி ஜோடியைப் பற்றி என்ன தெரியும்?
அது...
அவர்கள் அங்கே அந்த வீட்டிலேயே பல வருடங்களாக தங்கி இருக்கலாம், ஆனால் ஏன் அவர்களாக இருக்க கூடாது?
மிஸ். நிக் உண்மையிலேயே நம்மிடம் அனைத்தையும் கூறிவிட்டாரா?
இப்பொழுது ஏன் இந்த சந்தேகம்?
நம்மை அவர் கொஞ்சம் குறைவாக மதிப்பிட்டு விட்டார் போல, அதன் விளைவு, இன்னும் அவர் நம்மிடம் பல விஷயங்களை மறைக்கிறார்!!
ட்ட்ரிங்ங்! ட்ட்ரிங்ங்!
அப்படியா!! உடனே மேலே அனுப்புங்கள்.
டொக்! டொக்!
ப்ளீஸ் கம் இன்!!


மிஸ்டர். பாய்ராட்!! தொந்தரவு செய்கிறேனா?
இல்லை... ஏதாவது முக்கியமான விஷயமா?
இந்த டெலிகிராம் மட்டும் தான்.
என்னுடைய கஸின் மேகி இன்று மாலை ஏழு மணிக்கு வருகிறாள்.
அதாவது உங்கள் காவலுக்கு நிற்கப் போகும் நபர்!!
அதேதான்.... நான் உங்களிடம் மீண்டும் சொல்கிறேன், மேகி ஒன்றும் அவ்வளவு திடமான பெண் இல்லை, அதற்கு பதில் என்னுடைய தோழி ப்ரெடி எவ்வளவோ மேல்!!
எனக்கு அப்படி தோன்றவில்லை!!
தற்சமயம் உங்களுக்கு பிடித்தவர்களை விட, பிடிக்காதவர்கள் அருகில் இருப்பது தான் நல்லது.
என் நண்பர்கள் மீது உங்களுக்கு சந்தேகமா?
சில மோசமான துரோகங்கள், எதிரிகளை விட நமக்கு நண்பர்கள் தான் அதிகம் செய்வார்கள்... வயதானால் உங்களுக்கே புரியும்.
நான் தைரியமானவள் தான்... ஆனால் இப்பொழுது அதிகம் பயப்படுகிறேன்!!



எந்த நிமிஷம் என்ன நடக்குமோ என்ற எண்ணம் தான் எனக்கு இப்பொழுது அதிகம் இருக்கிறது.
நேற்று இரவு அனைத்து கதவுகளையும் இறுக்க மூடிவிட்டு, என் கட்டிலைக் கூட நான் அறையின் நடுவே போட்டுக் கொண்டு தான் தூங்கினேன்!!
இன்று காலை கூட இங்கே வருவதற்கு நான் எப்பொழுதும் வரும் வழியை பயன்படுத்தவில்லை!
என்னால்... இதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாது!!
மிஸ்.நிக், நீங்கள் என்னிடம் எதையும் மறைக்கவில்லையே?
இன்னமும் நான் உங்களிடம் எதையோ மறைக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? நானும் எவ்வளவோ யோசித்து விட்டேன், என்னிடம் இதற்கு மேல் சொல்வதற்கு ஒன்றும் இல்லை!
என்னை சுற்றி நடக்கும் அனைத்திற்கும், என் அருகில் இருக்கும், நெருங்கிய யாரோ ஒருவர்தான் காரணம் என்று நீங்கள் கூறுவதை நினைக்கும் பொழுது எனக்கு பைத்தியம் தான் பிடிக்கிறது.
நான் கேட்ட சின்ன கேள்விக்கு இவ்வளவு படபடப்பு தேவையில்லை, கொஞ்சம் சுதாரித்துக் கொள்ளுங்கள்!
நான் படபடப்பாக இருக்கிறேனா? பிரெட்டி தான் என்னிடம் இந்த வார்த்தையை அதிகம் பயன்படுத்துவாள், அவள் உங்களிடம் சொன்னாளா?
நிச்சயமாக இல்லை!
எனக்கு தெரியும், அவள்தான்...
மிஸ்.நிக், நீங்கள் இப்படி பயப்படுவதற்கு நானே ஒரு காரணமாக அமைந்து விட்டேனோ என்று நினைக்கிறேன்...


உங்கள் வீட்டை வாங்கவோ இல்லை அபகரிக்கவோ யாராவது முற்பட்டு இருக்கிறார்களா?
இதுவரை இல்லை, எனக்கும் அந்த வீட்டை விற்கும் எண்ணம் துளியும் இல்லை, அந்த வீடு தான் என்னுடைய உயிர்.
நீங்கள் ஏதாவது உயில் எழுதி வைத்துள்ளீர்களா?
ஆமாம், ஒரு ஆறு மாதத்திற்கு முன் எனக்கு அப்பெண்டிக்ஸ் அறுவை சிகிச்சை நடைபெற்றது, அதற்கு முன் உயிலை தயார் செய்தேன், என் கவுன்சிலரின் அறிவுறுத்தலின் பெயரில்.
மிஸ்டர்.வைஸ்?
ஆமாம்.
அந்த உயிலின் சாராம்சத்தை கொஞ்சம் விளக்க முடியுமா? உங்களுக்கு ஆட்சேபனை இல்லாத பட்சத்தில்...
அசையா சொத்துக்கள் அனைத்தையும் சார்லசுக்கும், அசையும் சொத்துக்கள் அனைத்தையும் பிரெட்டி பெயரில், என்னுடைய கடன்கள் உட்பட...
உங்களுடைய வக்கீல் மற்றும் களின்... நல்ல விஷயம்...
நிறைய பேசிவிட்டோம், இன்று இரவு செயின்ட் லூ பகுதியில் வானவேடிக்கை நிகழ்ச்சி நடக்க இருக்கிறது, அதை என் வீட்டில் இருந்து பார்த்தால் அருமையாக இருக்கும்.
என்னுடைய நண்பர்கள் அனைவரும் வருவார்கள், நீங்களும் வந்தால், அவர்களை நோட்டம் விட வசதியாக இருக்கும், என்ன சொல்கிறீர்கள்?
உங்கள் பாதுகாப்பு எங்கள் கையில், தைரியமாக செல்லுங்கள்.
டின்னர் ஒன்பது மணிக்கு, வானவேடிக்கை இரவு பதினோரு மணிக்கு.
நிச்சயம் வருகிறோம்!
மிக்க நன்றி!


131
132
டொக்! டொக்! டொக்!
அது மட்டும் இல்லை இப்பொழுது தான் மிஸ்.நிக் என் அறையை விட்டு கிளம்பினார்.
யாரு?
நான்தான்! இன்று இரவு மிஸ். நிக் வீட்டில் டின்னர், அங்கே ஏதோ வான- -வேடிக்கை நிகழ்ச்சியும் நடக்குமாம்.
இதை சொல்லத்தான் என்னை எழுப்பினீர்களா?
மிஸ்டர். பாய்ராட், உங்களை நான் உயர்ந்த இடத்தில் வைத்திருந்தேன், நீங்களா இப்படி?!
ஹேஸ்டிங்ஸ்!! உன்னை இப்படி எல்லாம் யோசிக்க சொல்லித் தருவது யார்?
இந்த ஊருக்கு வந்ததில் இருந்து நீ ஒரு மார்க்கமாகத்தான் இருக்கிறாய்!
அடுத்த ரயிலில் நாம் இருவரும் எக்சீடர் செல்கிறோம், மிஸ்டர். வைசை சந்திக்க...
இதோ கிளம்பி விடுகிறேன்...
நான் இங்கே ஒரு வீடு வாங்கலாம் என்று நினைக்கிறேன், அது கடற்கரை பக்கத்திலும், செயின்ட் லூ அருகிலும் இருந்தால் வசதியாக இருக்கும்...
VYSE
SOLICITOR
COMMISSIONER FOR OATHS
அது மட்டும் இல்லை நான் வீட்டையும் பார்த்துவிட்டு தான் இங்கே வந்திருக்கிறேன், வீட்டின் உரிமையாளர் மிஸ்.பக்லீயிடமும் இதைப் பற்றி பேசிவிட்டேன்.
ஓஹ்! ஊர் மக்களால் "அபாய வீடு" என்று அழைக்கப்படுகிறதே அந்த வீடா! அதற்கு நிச்சயம் வாய்ப்புகள் இல்லை!


அதைத்தான் அவரும் சொன்னார், மேற்கொண்டு உங்களையும் வந்து பார்க்க சொன்னார்.
என்னுடைய களினைப் பற்றி எனக்கு தெரியாதா என்ன?
யார் உங்களுடைய களின்? அந்த வீட்டில் தனியாக ஒரு பெண் தங்கி இருக்கிறாரே அவரா? அப்படியென்றால் அந்த வீட்டை அவர் விற்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லையா?
இல்லை.
ஒரு நல்ல தொகை கொடுத்தாலும் கூடவா?
நீங்கள் அந்த வீட்டை வாங்கினாலும், அதை சரி செய்வதற்கு அதிகம் செலவிட நேரிடும், இப்பொழுது பிரச்சனையே என்னுடைய களின் தான்!
அந்த வீடு என்ன மாயம் செய்ததோ தெரியவில்லை, அவள் அந்த வீட்டை விற்கக்கூடாது என்பதில் பிடிவாதமாக இருக்கிறாள்.
மறந்துவிடுங்கள்!
அடுத்தது என்ன?
ஒன்றும் இல்லை!
எனக்கு உள்ளே அவர் சொன்ன பதில் எதுவும் சரியாக படவில்லை, அந்த வீட்டை விற்பதில் அவருடைய களின் விரும்பமாட்டார் என்று இவர் ஏன் இவ்வளவு வாதாடவேண்டும்? ஏதோ சரியில்லை...
மேலும் நேற்று இரவு அனைவரும் செயின்ட் லூவிற்கு வந்து இருந்தார்களாம் இவர் ஒருவரை தவிர...
இதை மட்டும் வைத்து எதையும் நிரூபிக்க முடியாது!
அது எனக்கும் தெரியும்!!


இதோ அவர்களே வந்து விட்டார்கள்!
கடந்த சில நாட்களாக இவர்கள் இருவரும் தான் எனக்கு பக்கபலமாக இருக்கிறார்கள்... இவள் தான் என்னுடைய கஸின் மேகி பக்லீ...
வெல்கம் மேடம்!
நீங்கள் பேசிக்கொண்டு இருங்கள், நான் உடையை மாற்றிக் கொண்டு வந்துவிடுகிறேன்.
அவர் உங்களிடம் நடந்ததை கூறினாரா?
சொன்னாள்!! ஆனால் சற்று மிகை படுத்தலோ என்று தோன்றுகிறது?
நிச்சயமாக இல்லை!
அப்படியென்றால், நான் இங்கே வந்தது வீண்போகவில்லை.



விருப்பம் உள்ளவர்கள் மட்டும் இதை பருகலாம்.
கலைநயத்துடன் கூடிய அழகான சால்வை, உங்களுக்கு கச்சிதமாக பொருந்துகிறது.
ஒரு முறை வெளிநாட்டிற்கு சென்றிருந்த பொழுது வாங்கியது.
அழகிற்கு மேலும் அழகை சேர்த்துவிட்டது!!
நாம் வான வேடிக்கையை பார்க்க கடல் இருக்கும் பக்கம் செல்ல வேண்டும், அங்கே இது நிச்சயம் தேவைப்படும்.
பேசியது போதும், அனைவரும் வாருங்கள், டின்னர் தயாராகிவிட்டது.
விர்ர்ரர்ர்ர்ரர்ர்ர்ரர்ர்ர்
?!
விசைப்படகு!!
விமானமாக இருக்கலாம்...



விமானங்கள் அழகு, அதை ஓட்டுபவர்கள் அழகிலும் அழகு...
சமீபத்தில் இறந்து போனாரே கேப்டன். சேடான், அவரை போலவா?!
யார் சொன்னது அவர் இறந்து விட்டது என்று? அவர் காணாமல் போய்விட்டார்
இறந்திருக்கவும் வாய்ப்புகள் உண்டு, அதனால் அப்படி சொன்னேன்.
அவர் ஒரு பொறுப்பில்லாத இளைஞன், அவருடை--ய அங்கிளை போலவே, அவரும் போன வாரம் தான் இறந்தார், தன்னுடைய மொத்த சொத்தையும் சேடானுக்கு தாரை வார்த்துவிட்டு. நீயும் அவரை போன வருடம் சந்தித்து இருக்கிறாய், மறந்துவிட்டாயா?
இல்லை.. இல்லை.. டோக்கேட் ஹோட்டலில் சந்தித்தோம், மேகியும் என்னுடன் இருந்தாள்...
அவர் கூட உன்னை விமானத்தில் சுற்றி காட்டினார் தானே?
விமானத்தில் பறப்பதே, ஒரு அலாதியான சுகம் தான்!
அந்த சேடான் பார்க்க எப்படி இருப்பார்? அழகாக இருப்பாரா?
இருப்பார்... ஆனால் எனக்கு ஏற்றவர் இல்லை!
மிஸ்டர். பாய்ராட், நீங்கள் விமானத்தில் பயணம் செய்து இருக்கிறீர்களா?
நான்...
ம... மன்னியுங்கள்!! உள்ளே தொலைபேசி என்னை கூப்பிடுகிறது என்று நினைக்கிறேன்...
அப்படியென்றால் காணாமல் போன சேடான்தான் அனைத்து சொத்துக்களுக்கும் வாரிசா? என்ன ஒரு கொடுமை!


வான வேடிக்கை இன்னும் சில நொடிகளில் தொடங்கிவிடும்!
ஓஹ்!!
ஆஹா!! அற்புதம்!!
பார்க்க நன்றாகத்தான் உள்ளது, ஆனால் குளிர்கிறது!!
நான் சென்று என்னுடைய சால்வையை எடுத்துக் கொண்டு வருகிறேன்.
நீங்கள் போக வேண்டாம்! நான் செல்கிறேன்!!
இல்லை.. வேண்டாம்.. உங்களுக்கு இடம் தெரியாது!
மேகி!! வரும்பொழுது அப்படியே என்னுடயதையும் கொண்டு வா!! என்னுடைய அறையில் இருக்கும்...
நிச்சயம் அவள் காதில் விழுந்திருக்காது...


எனக்கும் வேறு ஒரு சால்வை தேவைபடுகிறது, நான் இதை வைத்து- -விட்டு வேறு எடுத்துக் கொண்டு வருகிறேன், அப்படியே உனக்கும் கொண்டு வருகிறேன்.
இந்த வெடிகள் எல்லாம் வெடித்தால் என்ன, வெடிக்காவிட்டால் என்ன, நான் கதகதப்பான இடத்திற்கு சென்று பதுங்கப் போகிறேன்... நீயும் என்னுடன் வருகிறாயா ஹேஸ்டிங்ஸ்!
பேசாமல் ஹோட்டல் அறைக்கு சென்று நிம்மதியாக தூங்கவாவது செய்யலாம்.
இந்த வான வேடிக்கை ஒன்றும் என்னை அவ்வளவாக ஈர்க்கவில்லை...
ஆனால் வேறு வழி...?!
அங்கே பார்!!


நான் எது நடக்கக்கூடாது என்று நினைத்தேனோ அது நடந்து விட்டது!
எவ்வளவு பெரிய முட்டாள் நான்!
ஆனால் இதில் நம்முடைய தவறு எதுவும் இல்லையே!
உங்களை காக்க வைத்ததற்கு மன்னிக்கவும், ஆனால் நான்....
?!
இங்கே இருப்பது?!
ஐயோ!! மேகி!! இல்லை!!
அவளுக்கு எதுவும் ஆகி இருக்காது...


மேகி!! ஏதாவது பேசு!!
மிஸ்.... இனிமேல் எந்த பிரயோஜனமும் இல்லை!
இதன் மூலம் தெளிவாக தெரிகிறது, கொலைகாரன் குறிவைத்தது உங்களுக்குத் தான்...
உங்களை காப்பாற்றியது இந்த சால்வை தான்!
இப்படி நடக்கும் என்று தெரிந்து இருந்தால், நானே இறந்து இருக்கலாம்...
அப்படி சொல்லாதீர்கள்!
ஹேஸ்டிங்ஸ்!! இங்கே நடந்த கொலையைப் பற்றி போலீசுக்கு தகவல் கொடுத்து விடு.
அப்புறம் மிஸ். நிக் நீங்கள் எந்த காரணத்தைக் கொண்டும் என்னுடைய நண்பரை விட்டு விலகாதிருங்கள்!
இறுதியில் ஆள் மாறி இருந்தாலும் கொலைகாரன் சாதித்துவிட்டான்!
என்ன ஆச்சு?!



ஏதாவது பிரச்சனையா மிஸ்டர்.....?
அது... அது... மிஸ். மேகி பக்லீயை கொலை செய்துவிட்டார்கள்...
ஐயையோ!! எப்படி?!
துப்பாக்கியால்... அதுவும் ஒரே ஒரு குண்டில்!!
நிஜமாகவா சொல்கிறீர்கள்?!
ஆமாம், என்னிடம் இப்படி கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டு, உன்னுடைய மேடம் குடிக்க ஏதாவது கொண்டு வா, நானும் அதற்குள் காவல்துறைக்கு தகவல் சொல்லி விடுகிறேன்!
மேடம்!! தயவு செய்து இதை பருகுங்கள், உங்களுக்கு இப்பொழுது இது நிச்சயம் தேவை...
அவளை வரவழைத்து நானே அவளை கொன்றுவிட்டேன்!! அவளுடைய சாவிற்கு நான்தான் காரணம்!!
தயவு செய்து இப்படி முட்டாள் தனமாக பேசாதீர்கள்!!
மேடம், டாக்டர் மற்றும் போலீஸ் அதிகாரிகள் உங்களை பார்க்க வந்துள்ளார்கள்.



இப்பொழுது தான் மிஸ்டர். பாய்ராட் நடந்த அனைத்தையும் விவரித்தார், உங்கள் மீது இது வரை நடத்தப்பட்ட கொலை முயற்சிகள் உட்பட...
ஆனால் எனக்கு ஒரு விஷயம் புரியவில்லை...
உங்களுடைய சால்வை மேகியிடம் எப்படி வந்தது?
நாங்கள் இருவரும் சால்வையை எடுக்க வீட்டுக்குள் சென்றோம், நான் போகும் வழியிலேயே என்னுடைய சால்வையை சோபாவின் மீது கிடத்திவிட்டு மேலே என்னுடைய அறைக்கு சென்றுவிட்டேன்...
நிக்!! என்னுடைய சால்வையை எங்காவது பார்த்தாயா?
கீழே இருக்கிறதா என்று பார்!
கீழே எவ்வளவு தேடியும், அவளுக்கு அவளுடைய சால்வை கிடைக்கவில்லை.
எல்லன் தான் எடுத்து வைத்து இருக்க வேண்டும், ஆனால் எங்கே?
நிக் நான் உன்னுடைய சால்வை--யை எடுத்துக் கொள்கிறேன்!!
நான் எனக்கு தேவையானதை எடுத்துக் கொண்டு வெளியே வரும்பொழுது, இவர்கள் இருவரும் மேகியுடன் வாசலில் இருந்தார்கள்...


உங்களுக்கு எந்த சத்தமும் கேட்கவில்லையா?
இந்த வெடிச்சத்தத்தில் உங்களுக்கு ஏதாவது கேட்குமா?
அதுவும் சரிதான், உங்களுக்கு யார் மீதாவது....
இல்லை, நான் யார் என்று சந்தேகப்படுவது இன்ஸ்பெக்டர்?
நடந்ததை வைத்துப் பார்த்தால் கொலை செய்தவன் இயல்பான மனநிலையில் இருக்க வாய்ப்பே இல்லை.
அவனை வந்து என்னையும் கொன்று விட்டு, இதற்கு ஒரு முடிவு கட்ட சொல்லுங்கள்!
மிஸ். பக்லீ... நான் மிஸ்டர் பாய்ராட்டிடம் பேசிவிட்டேன், தற்சமயம் உங்களுக்கு தேவைப்படும் ஒரு பாதுகாப்பான இடம் என்னிடம் உள்ளது...
....நீங்கள் ஏன் சிறிது காலம் என்னுடைய மருத்துவமனையில் ஓய்வு எடுக்க கூடாது?
இனிமேல் நான் சொல்வதற்கு ஒன்றும் இல்லை, உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள்!
அவரை உள்ளே வரச்சொல்லுங்கள்!!
என்னை உள்ளே விடுங்கள்!!
நிக்!! நீ இறந்து விட்டதாக சொன்னார்கள்!
இப்பொழுதுதான் எனக்கு விஷயம் தெரிந்தது, உடனே வந்துவிட்டேன்!!
நீ எப்படி இருக்கிறாய்? உன் மனநிலை எப்படி இருக்கிறது?


மிஸ்டர்.பாய்ராட்!! நன்றாக தூங்கினீர்களா?
இல்லை... என்னுடைய யோசனைகள் என்னை தூங்கவிடவில்லை, ஒரு கொலை நடந்து இருக்கிறது, என்னால் எப்படி நிம்மதியாக தூங்க முடியும்?!
மேலும் அந்த கொலைகாரனின் வேலை இன்னும் முடியவில்லை, அதனால் இன்னொரு கொலை நடக்கவும் வாய்ப்புகள் உண்டு.
நிச்சயமாக!! முடிந்தவரை அதை தடுத்து நிறுத்த வேண்டும்!!
என் கணிப்பில் நான் ஏதோ தவறு செய்துவிட்டேன், இப்பொழுது மீண்டும் முதலில் இருந்து தொடங்கவேண்டும், இம்முறை கொலைகாரனை தேடி!
அவன் மிஸ். நிக்கிற்கு மிகவும் நெருங்கியவனாக இருக்கவும் வாய்ப்புகள் இருக்கிறது!
அவள் இது நாள் வரை அதை கவனிக்கவும் இல்லை, உணரவும் இல்லை!
எது எப்படி இருந்தாலும், நேற்று அங்கே இருந்த யாரையும் நம்மால் சந்தேகிக்க முடியாது.
ஏன் முடியாது?
அவர்கள் அனைவரும் இரவு முழுவதும் அங்கேதான் இருந்தார்களா?
அது... அதை என்னால் உறுதியாக கூறமுடியாது...
அதானல் தான் சொன்னேன்!
இதைத் தவிர வேறு ஏதாவது தகவல் உள்ளதா?
இல்லை, சேடான் இறந்த தகவலைத் தவிர வேறு எதுவும் இல்லை.
அவரது உடலையும் கண்டுபிடித்து விட்டார்களாம், நேற்று நடந்த வாணவேடிக்கைக்கு நீங்களும் தான் சாட்சி...



நான் உங்களுக்கு உதவலாமா மிஸ்டர். பாய்ராட்?
ஆனால்... எப்படி?
உங்களுக்கு விஷயம் தெரிந்து நீங்கள் என்னிடம் வருவதற்கு முன், நானே முந்திக்கொண்டேன்...
உங்களுக்கே தெரியும் ஜிம் லாசரஸ் எவ்வளவு பெரிய செல்வந்தர் என்று? நானும் அவரும் ஒருவரை ஒருவர் விரும்புகிறோம், இதை ஊர்மக்கள் சொல்லி நீங்கள் கேட்பதுடன், நானே சொல்லி விடலாம் என்று இங்கே வந்தேன்.
உங்களுடைய காதல் உங்கள் உரிமை, அதில் ஏன் நான் மூக்கை நுழைக்க போகிறேன்?
ஜிம் இந்த ஊரை சேர்ந்தவர் தான், ஆனால் இந்த ரகசியத்தை பாதுகாக்க, நாங்கள் ஊருக்கு வெளியில் உள்ள ஒரு ஹோட்டலில் தான் சந்தித்துக்கொள்வோம்.
நான் சொல்ல வந்ததை சொல்லிவிட்டேன், இப்பொழுது நான் நிக்கை பார்க்க மருத்துவமனைக்கு செல்கிறேன்.
அற்புதமான விஷயம்...
ஆனால்?!... அங்கே தான் அவரை பார்க்க யாரையும் அனுமதிப்பது இல்லையே!!
உண்மைதான்...
அதை சொல்வதற்கு தான் மருத்துவர்கள் இருக்கிறார்களே... அப்புறம் இன்னொரு விஷயம், நம்மை யாராலும் தடுக்க முடியாது!
HOSPITAL
நீங்கள் வந்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி... இங்கே இப்படி தனியாக இருப்பது எனக்கு வெறுப்பாக உள்ளது...
தனியாக இருந்தாலும் உயிரோடு இருக்கிறீர்கள்!! அதை நினைத்து சந்தோஷப்படுங்கள்!!



வெறுப்பை குறைத்துக்கொண்டு உங்களுக்காக உயிர் தியாகம் செய்த உங்கள் கஸினை நினைத்துக் கொள்ளுங்கள்...
இல்லை சேடானை நினைத்துக் கொள்ளுங்கள்...
SETON FOUND DEAD
அவரா?!
இப்பொழுது எதற்கு அவரைப் பற்றி என்னிடம் சொல்கிறீர்கள்?
என்ன விஷயம்?
விஷயம் இல்லாமல் சொல்வேனா, நேற்று டின்னரில் அவருடனான உங்களுடைய சந்திப்பை பற்றி கூறினீர்கள், மேலும் இன்று காலை இந்த செய்தித் தாளில் வந்த செய்தி, இரண்டையும் கூட்டிக் கழித்துப் பார்த்தேன், முடிவாக உங்கள் பெயர் தான் வந்தது!!
இப்பொழுது புரிகிறது, நீங்கள் ஏன் இவ்வளவு மன அழுத்தத்துடன் வாழவே விருப்பம் இல்லாதவர் போல இருக்கிறீர்கள் என்று.
இதெல்லாம் காதலர்களின் இயல்பான குணாதிசயங்கள்!
இதன் மூலம் உங்களுக்கு யாரும் போட்டியே இல்லாதவாறு சொத்துக்கள் அனைத்தும் உங்களை வந்தடைய போகிறது, சரிதானே?
உங்கள் ஒருவருக்கு மட்டும்!
அதாவது சேடான் உங்கள் மனதில் ஏற்படுத்திய காயங்களுக்கு மருந்தாக, சரியா?
இனிமேல் மறைத்து எந்த பிரயோஜனமும் இல்லை...
ஆமாம் நாங்கள் இருவரும் காதலித்தோம், அவருடைய அங்கிளுக்கு பயந்து யாருக்கும் தெரியாமல் நிச்சயமும் செய்து கொண்டோம்.
எட்டு நாட்களுக்கு முன் அவர் இறந்ததால், நீங்கள் கொஞ்சம் நிம்மதியானீர்கள், இப்பொழுது இப்படி ஒரு விபரீதம்.


இப்படி ஒரு கொடுமை வேறு எந்த பெண்ணுக்கும் நடக்கக் கூடாது!
அதுதான் வாழ்க்கை, நம்முடைய கணிப்புகளுக்கு அப்பாற்பட்டவை!
உங்களுக்கு எப்பொழுது தெரியும்?
நேற்று மதியம்... டெலிகிராம் வந்தது...
தெரிந்துமா, எதுவும் தெரியாததை போல இருந்தீர்கள்?
நானும் எவ்வளவோ கட்டுப்- -படுத்திக் கொண்டேன், முடியவில்லை, அதனால் தான் நேற்று டின்னரில் இருந்து பாதியிலேயே சென்றுவிட்டேன்.
இதில் இருந்து ஒரு விஷயம் உறுதியாகிறது, அவர் கொலையாளி இல்லை...
அவருடைய சொத்துக்கள் அனைத்தும் இப்பொழுது உங்களுக்கு தானே வரப்போகிறது?
ஆமாம்!! அவருடைய உயிலும் அப்படித்தான் சொல்கிறது.
ஓஹ்!
யார் யாருக்கு தெரியும்?
என்னுடைய வக்கீல் மிஸ்டர். சார்லசுக்கு மட்டும் தான்...
மிஸ்டர் வைஸ்? ம்ம்ம்... உங்களுடைய நண்பர் பிரெடி?
எங்களுக்குள் நிச்சயம் ஆனதைப் பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது.
அப்புறம் நாங்கள் அந்த உயிலை பார்க்கலாமா?
நிச்சயமாக! வீட்டில் இருக்கிறது... என்னுடைய மற்ற தபால்களுடன்.
ஆனால் எங்கே என்று எனக்கு மறந்துவிட்டது!
நீங்கள் அனுமதித்தால் நாங்கள் சென்று தேடிப்பார்க்கிறோம்..


ஹலோ எல்லன்!! நாங்கள்...
உள்ளே வாருங்கள், மேடம் அனைத்தையும் தொலைபேசியில் கூறிவிட்டார்.
நாம் அவருடைய அலுவலக அறையில் இருந்து தேடுதலை துவங்குவோம்
இங்கே ஏன் எங்காவது ஒரு ரகசிய லாக்கர் இருக்கக்கூடாது?
ஒவ்வொன்றாக தேடுவோம்!! அவசரப் படாதே!!
அனைத்தும் ரசீதுகள்!!
இந்த குப்பையில் தேடுவது வீண் வேலை!
இதை பிரித்து வைத்தால் தான் என்ன? இப்பொழுது எல்லாம் நம் தலையில்...
இங்கே ஒரு கடிதம், மிஸ்.நிக் அவருடைய தோழிக்கு அறிவுரை கூறி எழுதியது...அடக் கடவுளே!! மிஸ்.பிரெடி போதைக்கு அடிமை?? நானும் நினைத்தேன்!!
அவ்வளவுதானா?! இங்கே வேறு ஏதாவது?
ஆஹா! மேஜையில் ஒரு ரகசிய அறை!
அங்கே தேடுவதற்கு பதில் உள்ளாடைகளுக்கு அடியில் தேடினாலாவது ஏதாவது கிடைக்கும்!
ஹேஸ்டிங்ஸ்!! நீ என்ன செய்கிறாய்....?



இதோ!! நான் சொல்லவில்லை!! பெண்களுடைய உள்ளாடைகள் தான் அவர்களுடைய ரகசிய லாக்கர்.
இதை நீ கண்டுபிடித்த காரணத்துக்காக, இப்பொழுது நீ பேசியதற்கு உன்னை சும்மா விடுகிறேன்!
அனைத்தும் சேடானிடம் இருந்து வந்த தபால்கள்,"அன்பே.. டார்லிங்... என் காதலே... உன்னை பார்த்த பின்பு என்னுடைய வாழ்க்கை முற்றிலும் மாறி விட்டது...","என்னுடைய அங்கிள் இதை சுத்தமா விரும்பவில்லை"... "தைரியமாக இரு, நாம் இதிலிருந்து மீண்டு வருவோம்"...
அடுத்து ஏப்ரல் 18 வந்த கடிதம் "நான் முடிவெடுத்து விட்டேன், யார் என்ன சொன்னாலும் எனக்கு கவலை இல்லை, நான் என்னுடைய பயணத்தை வெற்றியுடன் முடித்துக்கொண்டு வந்த பிறகு, யாராலும் நம்மை பிரிக்க முடியாது".
எல்லாம் காதல் ரசம் சொட்டச் சொட்ட எழுதிய கடிதங்கள்!
ஆஹ்! இதோ! "அன்பே . இந்த பயணம் மிகவும் ஆபத்துக்கள் நிறைந்தது, எனக்கு எதுவும் ஆகாது, ஒருவேளை அப்படி நிகழ்ந்துவிட்டால் என்ன செய்வது என்பதனால் நான் ஒரு உயிலை தயார் செய்து உள்ளேன், நான் அதை தபால் மூலம் உனக்கு அனுப்பிவைக்கிறேன்..."
அதற்கு பின்னால் இருக்கும் காகிதம் என்னவென்று பார்?!
கிடைத்துவிட்டது!
இப்பொழுது பிரச்சனை என்ன--வென்றால், இந்த கடிதங்களை யார் வேண்டுமானாலும் படித்து இருக்கலாம்... அப்படியே இந்த உயிலையும்...
அவருக்கு நிச்சயம் சேடான் இறந்த செய்தியும், இந்த உயிலைப் பற்றியும் தெரிந்து இருக்க வேண்டும்...
அதேதான்! நான் பிடித்துவிட்டேன்!!
மிஸஸ். பிரெடி ரைஸ்!! மிஸ், நிக்கின் உயில் என்ன சொல்கிறது, ரைசிற்கு இந்த வீடு கிடைக்காது, ஆனால் வீட்டை தவிர மீதம் உள்ள அனைத்தும் கிடைக்கும், அப்படிப் பார்த்தால் இப்பொழுது வரப்போகும் சொத்தும் அவருக்குத் தான் சேரும், சரியா?


நீங்கள் சொல்வது போல நடந்திருக்கவும் வாய்ப்புகள் உண்டு!
ஏன், உனக்கு இந்த யோசனை வரவில்லையா!
அப்படி இல்லை, எனக்கு நீங்கள் சொல்வதில் உடன்பாடு இல்லை அவ்வளவுதான்! சேடானின் அங்கிள், சேடான் மற்றும் மிஸ். நிக், இவர்கள் மூவரும் இறந்தால் மட்டுமே சொத்தை அபகரிக்க முடியும், மேலும் போதைக்கு அடிமையான ஒரு பெண்ணால் இவ்வளவு யோசிக்க முடியும் என்பதில் எனக்கு சுத்தமாக உடன்பாடு இல்லை!
மேலும் அவளுக்கு இந்த விஷயங்கள் அனைத்தும் எப்படி தெரியும்?
இந்த கடிதங்களை படித்தால், யார் வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளலாம்!
அப்படியென்றால் நீங்கள் மிஸஸ்.ப்ரெடி ரைஸை சந்தேகிக்கிறீர்கள்,
சந்தேகமே இல்லை என்கிறேன்!!
பேச்சு சுவாரசியத்தில், சொல்ல மறந்து- -விட்டேன்!!
இறந்த மிஸ்.மேகி பக்லீயின் பெற்றோர்கள் இன்னும் சற்று நேரத்திற்கு எல்லாம் இங்கே இருப்பார்கள்..
பாவம்!! உயிருடன் வீட்டில் இருந்து கிளம்பி வந்த பெண்ணை சடலமாக திரும்ப கொண்டு செல்ல போகிறார்கள்!!
மிஸ். நிக் இப்பொழுது மருத்துவமனையில் இருப்பதால், நாமே சென்று அவர்களை வரவேற்போம்...


என்னுடைய பெயர் ஹெர்க்யூல் பாய்ராட், டிடெக்டிவ்... இந்த வழக்கில் கமிஷனருக்கு உதவியாக இருக்கிறேன்
... உங்களுடைய இழப்பிற்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள்.
அவளுக்கு ஏன் இப்படி ஒரு கொடுமை நடக்க வேண்டும்!
நான் நேற்றில் இருந்து அவள் எனக்கு கடைசியாக எழுதிய கடிதத்தையே படித்துக் கொண்டு இருக்கிறேன்...
கடிதமா?
நான் அதை பார்க்கலாமா?
நிச்சயமாக...
இதில் தான் அவளுடைய கடைசி வார்த்தைகள் அடங்கி இருக்கிறது.
அன்புள்ள அம்மாவுக்கு, நான் நல்ல படியாக வந்து சேர்ந்து விட்டேன், பயணம் முழுவதும் வண்ணமயமான இயற்கை காட்சிகள் நிறைந்ததாக இருந்தது, நிக் தான் எப்போழுதும் படபடப்பாகவே இருக்கிறாள், மேலும் என்னை ஏன் இந்த ஒரு நாள் பயணத்திற்கு கட்டாயப் படுத்தினாள் என்று தான் புரியவில்லை... பிறகு விளக்குகிறேன் என்று கூறி இருக்கிறாள்...
அப்படியென்றால் மேகி சீக்கிரம் கிளம்பிவிட்டாளா?
இல்லை, நிக் தான் முன்னதாகவே டெலிகிராம் அனுப்பி கிளம்பச் சொன்னாள்.
அப்போ...அப்பொழுது மேகிக்கு ஏற்கனவே இங்கே வருவதற்கான திட்டம் இருந்ததா?
ஆம்... இப்பொழுது அதற்கு என்ன அவசியம்?
அப்படி இருக்க வாய்ப்புகள் இல்லை, நான் தானே நிக்கிடம் டெலிகிராம் அனுப்பச் சொன்னேன்...


என்ன? இல்லை... நிக்?!
மிஸ்டர். பாய்ராட்!! நீங்கள் கூறுவது நிஜம்தானா?!
கேட்கவே கஷ்டமாகத்தான் இருக்கிறது... எதுவும் நம் கையில் இல்லை... நான் நண்பர்களுக்கு தகவல் சொல்லிவிடுகிறேன்.
நான் அவருடைய களின் வைஸிற்கு ஏற்கனவே சொல்லிவிட்டேன்
ஜார்ஜ்?... நான் சொல்வது உண்மைதான், நிக் நேற்று இரவு இறந்து விட்டாள்... அவள் உணவில் யாரோ விஷம் கலந்து விட்டார்கள்!
உங்கள் திட்டம் தான் என்ன?
அவசரப்படாதே, உடனே பதில் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு.
இப்பொழுது தானே எலிக்கு பொறி வைத்து இருக்கிறோம், கொஞ்சம் பொறு எலி தானாகவே வந்து சிக்கும்.
எப்படிப் பார்த்தாலும் ஒரு விஷயம் மட்டும் தான் இடிக்கிறது, நாம் சந்தேகப்பட நிறைய நபர்களும் இல்லை, ப்ரெடி என்று சொன்னால், அவளுக்குத் தான் சொத்து மொத்தமும் போகப் போகிறது, ஆனால் அவளுக்கு அந்த விஷயம் தெரிந்து இருக்க வாய்ப்புகள் குறைவே...
... சார்லஸ் என்று சொன்னால், அவனுக்கு உயிலில் என்ன எழுதி இருக்கிறது என்று தெரியும், அவளை கொல்வதனால் அவனுக்கு பெரிதாக எந்த லாபமும் இல்லை!!
அதேதான் ஜார்ஜுக்கும்!!


நான் எவ்வளவு யோசித்தாலும், இந்த விளையாட்டு ஒரு முடிவை தொடவே மாட்டேன் என்கிறது, மொத்த ரகசியமும் அந்த வீட்டில் தான் ஒளிந்து கிடக்கிறது....
?
மிஸ்டர். பாய்ராட்!! அங்கே!!
என்ன?
அங்கே யாரோ ஒரு நபர்... நம்மை வேவு பார்க்க வந்திருக்கலாம்... நான் இப்பொழுது தான் பார்த்தேன்...
சும்மா கனவு காணாதே ஹேஸ்டிங்ஸ்!
நிச்சயமாக இல்லை!! நான் உறுதியாக சொல்லுவேன், நான் பார்த்தது ஒரு மனித உருவம் தான்!!
விடு.. விடு.. நாம் எந்த ரகசியத்தையும் உதிர்த்துவிடவில்லை.
நீ முதலில் இன்று மாலை அனைவரையும் மிஸ். நிக்கின் வீட்டில் கூடுமாறு அழைப்பு விடுத்து விடு!!



லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன், நான் இன்று உங்கள் அனைவரையும் இங்கே கூடச் செய்ததற்கு காரணம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி விவாதிக்கவே, முதலில் மிஸ்டர். சார்லஸ் தொடங்குவார்.
உங்கள் அனைவருக்கும் தெரியும், என்னுடைய கஸினை யாரோ விஷம் வைத்து கொன்றுவிட்டார்கள்! தற்சமயம் அவள் உடலுக்கு பிரேத பரிசோதனை நடந்துக்கொண்டு இருக்கிறது.
எப்படி இருந்தாலும், அவளுடைய வக்கீல் என்ற முறையில் மிஸ்டர். மைக்கேல் சேடானின் உயிலை...
...உங்கள் முன் இப்பொழுது படிக்கப் போகிறேன், “மைக்கேல் சேடான் ஆகிய நான்...
...சுயநினைவுடன் இங்கே தெரிவிப்பது என்னவென்றால், என்னுடைய இறப்பிற்கு பின் என்னுடைய ஆஸ்தி அனைத்தும் மாக்டெல்லா பக்லீயையே சேரும்...”
டுப்
கீழே குனியுங்கள்!!
டுப்


??
நேற்று நான் பார்த்த அதே உருவம்!!
அவள்.. அவள் இறந்துவிட்டாளா?
யார்?
என்னுடைய மனைவி... ப்ரெடி...
ஓஹ்!! ப்ரெடி... நான் இப்படி செய்ததற்கு... நிச்சயமா வருந்தமாட்டேன்...
இவர் என்னுடைய கணவர் தான், இவன் ஒரு குடிகாரன், என்னையும் போதை பழக்கத்திற்கு அடிமையாக்கிய கொடூரன், அதனால் தான் நான் இவனை விட்டு பிரிந்தேன்...அன்று முதல் இன்று வரை என்னை பின்தொடந்து, தொந்தரவு செய்வதே இவன் வேலை... பைத்தியம் முத்திவிட்டது...
அன்று மேகியை தவறுதலாக கொன்றதும் இவனாகத்தான் இருக்க வேண்டும்...


அப்போ நான் இனிமேல் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை!!
நீங்களா!!
ஆஆஹ்!!
மேடம் நிக்!
எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்... அனைத்தையும் முதலில் இருந்து நான் விளக்குகிறேன்...
ஆரம்பம் முதலே, என்னுடைய சந்தேகப்பட்டியலில் நான் ஒரு நபரை சேர்க்காமல் விட்டுவிட்டேன்...
என்னுடைய கணவரைத்தானே?
இல்லைமிஸ்.ப்ரெடி! வேறொரு நபர்... நான் ஆரம்பம் முதல் காணத் தவறிய நபர், மேகி பக்லீயை கொன்ற நபர்!
??
!?!
!?!
நான் இன்று மதியம் இந்த வீட்டில் ஒளிந்துகொண்டேன்..
ஒரு நபர் படிகளுக்கு அடியில் இருந்த ரகசிய அறையில் இருந்து ஒரு துப்பாக்கியை எடுத்தார்...
பின் அதை நன்கு துடைத்து, மிஸஸ். ரைஸ்ஸின் கோட்டுக்குள் போட்டு விட்டார்....
?!?




அகதா




கிறிஸ்டி

—முடிந்தது

# அகதா கிறிஸ்டி

## அபாய வீடு

மாக்டல்லீன் பக்லீ (எ) நிக், செயின்ட் லூ அருகில் உள்ள ஒரு தனி வீட்டில், தனியாக வசித்து வருகிறாள், மூன்று முறை அவளைக் கொல்ல முயற்சி நடந்து விட்டது!

“தற்செயல்” என்ற வார்த்தையில் நம்பிக்கை இல்லாத மிஸ்டர். ஹெர்க்யூல் பாய்ராட், இதில் புதைத்துள்ள மர்மங்களை துப்புத் துலக்க களம் இறங்குகிறார்!

விசாரணையில் விடையும் கிடைத்தது, சில பூகம்பங்களும் வெடித்தது......



FAN MADE NOT FOR SALE

NO RIGHTS RESERVED